இந்து தமிழ் திசை (23.01.2021)




கரூர் மாவட்டம் புகழூர் டிஎன்பிஎல் குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பங்கேற்றோர்.

# புகழூர் டிஎன்பிஎல் முப்பெரும் விழா

கரூர்

புகழூரில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் அங்குள்ள விளையாட்டு மைதானத்தில் சமுதாயப் பொங்கல் விழா, முன்களப் பணியாளர்களை கவுரவிக்கும் விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா என முப்பெரும் விழா அண்மையில் நடைபெற்றது.

இதில், தமிழ்நாடு செய்தித்தாள்காகித நிறுவன குடியிருப்பு வளாகத்தில் தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள 108 பெண்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பொங்கல் வைக்க தேவையான மண்பானை, சில்வர்வாளி, அரிசி, வெல்லம் உள்ளிட்ட பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்விஆர் கிருஷ்ணன் விழாவை தொடங்கி வைத்தார். முதன்மைப் பொதுமேலாளர் (வணிகம், மின்சாரம், கருவியியல்) ஏ.பாலசுப்பிரமணியன், முதன்மைப் பொதுமேலாளர் (உற்பத்தி) கு.தங்கராஜு, துணைப் பொதுமேலாளர் (நிதி) சுபா ஷிஸ்தே ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முதன்மைப் பொதுமேலாளர் (மனிதவளம்) பா.பட்டாபிராமன் வரவேற்றார். பெண்கள் பொங்கல் வைத்த பிறகு, சூரியனுக்கு படைக்கப்பட்டு சூரிய வழிபாடு நடைபெற்றது.

பின்னர், டிஎன்பிஎல் பேரூராட்சி துப்புரவு, அலுவலகப் பணியாளர்கள், ஓலப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், டிஎன்பிஎல் செய்தொழில் சுகாதார மைய மருத்துவர்கள், செவிலியர்கள், பாதுகாப்பு பணியாளர்கள், குடியிருப்பு வளாக அத்தியாவசியத் துறையைச் சார்ந்த கட்டுமான, மின்சாரப் பராமரிப்பு பணியாளர்கள் கவுரவிக்கப்பட்டனர். டிஎன்பிஎல் நிறுவனத்தின் சமுதாய நலப்பணித்திட்டத்தின் கீழ் ரூ.4.09 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

தினமணி (21.01.2021)

# டிஎன்பிஎல் ஆலை சார்பில் சமுதாயப் பொங்கல் விழா

கரூர், ஜன. 20: டிஎன்பிஎல் ஆலை குடியிருப்பு வளாகத்தில் சமுதாயப் பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில் ஆலையின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பா. பட்டாபிராமன், வரவேற்றார். செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் விழாவைத் தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார். முதன்மை பொதுமேலாளர் (வணிகம் மற்றும் மின்சாரம், கருவியியல்) பாலசுப்ரமணியன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராஜு, துணைப் பொது மேலாளர் (நிதி) சுபாஷிஸ் தே ஆகியோர் வாழ்த்திப்பேசினர்.

இதில் ஆலையை சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் 108 பேர் பொங்கல் வைத்தனர்.




டிஎன்பிஎல் ஆலை குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்ற சமுதாயப் பொங்கல் விழாவில் பங்கேற்ற ஆலை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள்.

தொடர்ந்து ஆலையின் சமுதாயத் திட்டத்தில் மாயனூர் ஊராட்சிக்கு குப்பைகள் சேகரிக்கும் மின்கல வாகனம், புன்னம் சத்திரம் ஒன்றியத் தொடக்கப் பள்ளி உள்ளிட்ட பள்ளிகளுக்கு பீரோக்கள் உள்ளிட்ட தளவாடப் பொருள்கள் வாங்க நிதியுதவி என பல்வேறு திட்டங்களுக்கு ரூ.4.09 லட்சம் நிதி வழங்கப்பட்டது.

மேலும் கரகாட்டம், காளியாட்டம், கருப்பசாமி, பொய்க்கால் ஆட்டம் ஆகிய நாட்டுப்புற நடனங்கள் கலைக்குழுவினரால் நடத்தப்பட்டது. விழாவில் ஆலைப் பணியாளர்கள் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள், கிராம மக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மாலை மலர் (15.01.2021)**

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி

வேலாயுதம்பாளையம், ஜன. 15-

கரூர் மாவட்டம் புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் குடியிருப்பு வளாகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்ட 108 மகளிர்களுக்கும், பொங்கல் வைப்பதற்கு தேவையான அனைத்து பொருட்களும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணி திட்டத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டது. 108 பெண்கள் பொங்கல் வைத்த பிறகு, பொங்கலானது சூரிய பகவானுக்கு படைக்கப்பட்டு சூரிய வழிபாடு நடைபெற்றது.

விழாவில் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன், வரவேற்று பேசினார். செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். முதன்மை பொதுமேலாளர் (வணிகம் மற்றும் மின்னியல் — கருவியியல்) பாலசுப்பிரமணியன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராஜூ மற்றும் துணைப் பொது மேலாளர் (நிதி) சபாஷிஸ் தே வாழ்த்தி பேசினர். காகித ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், குத்துவிளக்கேற்றி விழாவினை தொடங்கி வைத்தார்.

கொரோனா தடை காலங்களில் பொது மக்களுக்காகவும், குடியிருப்பு வளாகத்தில் உள்ளவர்களுக்காகவும் உழைத்திட்ட தேர்வுநிலை பேரூராட்சியின் துப்புரவுப் பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், தொழில் சுகாதார மைய மருத்துவர்கள், செவிலியர்கள், பாதுகாப்பு பணியாளர்கள் மற்றும் மற்றும் அனைத்து துறையை சார்ந்த ஒப்பந்த பணியாளர்களும் கவுரவிக்கப்பட்டனர்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித்திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டம், மாயனூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.1,60,000 மதிப்பிலான குப்பைகள் சேகரிக்கும் மின்கல வாகனம், மாணவர்களின் பயன்பாட்டிற்காக ரூ.1,64,000 மதிப்பிலான 7 பீரோக்கள், 16 நாற்காலிகள், 6 பெஞ்சுகள், 30 மேசைகள், 2 ரேக்குகள் ஆகிய தளவாடங்கள் புன்னம் பசுபதிபாளையம், கடக்கவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும், நொச்சிப்பாளையம், புன்னம் சத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டது. தாளப்பரப்பு, ஏமூர் மற்றும் தஞ்சைப்புகளூர் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள 4 கோவில்களுக்கு கட்டமைப்பு பணிகளுக்காக ரூ.45,000 க்கான காசோலைகள் மற்றும் புன்னம் ஊராட்சிக்குட்பட்ட சந்திரமனோ என்பவருக்கு மருத்துவ சிகிச்சைக்காக, ரூ.40,000க்கான காசோலை ஆக மொத்தம் ரூ.4,03,000 ( மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் விழாவில் வழங்கப்பட்டது. விழாவில் பல நாட்டுப்புற நடனங்கள், குழந்தைகளுக்காக விளையாட்டுகள் நடைபெற்றது. விழாவானது கொரோனா விதிமுறைகளை கடைப்பிடித்து நடத்தப்பட்டது.




நிகழ்ச்சியில் பெண்களுக்கு பொங்கலுக்கு தேவையான பொருட்கள் வழங்கப்பட்ட காட்சி.